


**முள்ளிவாய்க்காலில் இறுதி வரை நின்று போராடிய போராளியின் அனுபவப் பதிவு இது. பாதுகாப்பான தளம் ஒன்றை இவர் சென்றடையும் வரை இவரது விபரங்களை தவிர்த்துக்கொள்கின்றோம்.**

# அனைவரையும் வேதனையில் ஆழ்த்திய பால்ராஜ் அண்ணையின் இழப்பு

தமிழ் மக்களை ஆழ்ந்த சேகத்தில் ஆழ்த்திய நிகழ்வாக விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதியான பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் வீரச்சாவு நிகழ்வு அன்று வன்னியில் நிகழ்ந்தது.

உண்மையில் போராளிகள், தமிழ் மக்கள் மனங்களில் மட்டுமல்ல, சிங்களப் படைகளினதும், படைத்தளபதிகளினதும், ஆட்சியாளர்கினதும் மனங்களில் எல்லாம் நிறைந்திருந்தவர் தளபதி பால்ராஜ்.

அதாவது எதிரிகளுக்கு எதிரியாகவும் மக்களுக்கு மக்களாகவும் போராளிகளுக்கு போராளியாகவும் பெறுப்பாளர்களுக்கு தளபதியாகவும் அண்ணனுக்கு தம்பியாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வலது கரமாகவும் திகழ்ந்தவர் எங்கள் பால்ராஜ் அண்ணா.

எல்லாராலும் செல்லமாக லீமா என்று அன்போடு அழைக்கப்படும் பால்ராஜ் அண்ணாவின் இழப்பு செய்தி 20.05.2007 அன்று அலம்பில் பகுதியில் நடந்தேறுகின்றது. பால்ராஜ் அண்ணா அவர்களின் விடுதலைப் போராட்ட வரலாறு செல்லமுடியாது, எழுத முடியாது, வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது. தமிழீழ விடுதலையின் முதுகெலும்பாக அவர் திகழ்ந்தவர்.

தமிழர்களின் வரலாற்றில் முதல் மரபுவழி படையணியாக திகழ்வதுதான் சாள்ஸ் அன்ரனி படையணி. விடுதலைப் போராட்டத்தின் தொடக்க காலத்தில் போராட்டம் பல்வேறு நெருக்கடி நெருக்குவாரங்களை சந்தித்தபோதெல்லம் அவற்றில் இருந்து விடுபட வழி எடுத்துக் கொடுத்தவரும் தமிழீழீழ தேசியத் தலைவர் அவர்களின் தோழருமான சாள்ஸ் அன்ரனி அவர்களின் நினைவினைத் தாங்கி தொடங்கப்பட்டதுதான் சாள்ஸ் அன்ரனி படையணி. இப்படையணியின் வரலாறு தமிழீழ மண் எங்கிலும் உண்டு. சாள்ஸ் அன்ரனி படை அணி களத்தில் என்றால், அதற்கு ஒரு பெருமை. காரணம் களம் வெற்றிக்களமாக மாறும் என்பதுதான்.

1983 யூலை 15ம் நாள் '*என்னை சுட்டுப்போட்டு துப்பாக்கியை எடுத்துக்கொண்டு போ*' என்று கட்டளை இட்ட வீரன்தான் லெப்.சீலன் என்று அழைக்கப்படும் சாள்ஸ் அன்ரனி. தலைவர் அவர்களுக்கு தோழனாக இருந்த சாள்ஸ் அன்ரனி அவரது நாமம் தரித்து 01.04.1994 அன்று உருவாக்கம் பெற்ற படையணியாக சாள்ஸ் அன்ரனி திகழ்கின்றது.

இந்தியாவின் 9வது பயிற்சிபாசறையில் பயிற்சி பெற்ற பால்ராஜ் அவர்களின் விடுதலைப் போராட்ட தொடக்ககாலமே போர்க்கலை வல்லவன் பசீலனுடன்தான் ஆரம்பிக்கின்றது. முன்னைய வன்னி மாவட்ட தளபதி மேஜர் பசீலனின் வலது கரமாக திகழ்ந்த லீமா அவர்கள், பசீலனின் பலத்திற்கு வலுச்சேர்க்கும் கரமாக அன்று திகழ்ந்தார். பசீலனின் தாக்குதல் ஒன்று என்றாலும் அல்லது பசீலனின் உணவிலிருந்து என்றாலும் அதில் லீமாவின் பங்கு இருக்கும்.

சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் முதல் தளபதியாகவும் விடுதலைப் புலிகளின் படைப்பிரிவின் துணைத் தளபதியாகவம் விளங்கியாவர் லீமா. களத்தில் தொலைத் தொடர்பு கருவிகளில் லீமாவின் கணீர் என்றகுரல் கேட்டால் போராளிகள் மத்தியில் உத்வேகம் பிறந்துவிடும். அதேவேளை, சிங்களப்படைக்கு அது பயப்பீதியைக் கொடுக்கும். களமுனைகளில் சண்டைகள் என்றால் லீமாவின் குரல்கள் தொலைத்தொடர்பில் ஓங்கி ஒலிக்கும். தனது கட்டளைகளால் ஏராளமான எதிரியின் படைமுகாம்களை தகர்த்து படைத்தளபாடங்களை அள்ளி வந்த சாதனைக்கு சொந்தக்காரர்.

விடுதலைப் புலிகளின் பலத்தை அதிகரிக்க பெருமளவு வெடிபொருள், படையப் பொருட்கள் தேவைப் பட்டன. தனிமனிதானாக செயற்பட்ட லீமா அவர்கள், பல்வேறு தாக்குதல்களில் விடுதலைப் புலிகளின் ஆயுத பலத்தினை அதிகரிக்கச் செய்தார். துணிவு – தந்திரம் – வேகம் இம்மூன்றின் உருவம்தான் பால்ராஜ் அவர்கள். எதிரி களம் திறப்பதற்கு முன்னர், எதிரிக்கு களம் திறப்பதில் வல்லவர். புதியபுதிய திட்டங்கள் மற்றும் போர்நுட்பங்களுடன் போராளிகளை வழிநடத்துவதில் வல்லவர் எங்கள் அண்ணா லீமா. இப்படிப்பட்ட லீமாதான் அன்று சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணியின் தளபதியாக எதிரிக்கு சிம்மசெப்பனமாக திகழ்ந்தார்.

களமுனையில் எதிரியுடன் நேரடியாக சண்டையிட்டு உடலெங்கும் பல விழுப்புண்களை தாங்கிக்கொண்டும் களமுனைகளில் வீறுநடைபோடுவார் எங்கள் லீமா. விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் என்றும் நிகழ்ந்திராத சாதனை நிகழ்த்திய வரலாற்று தாக்குதலாக ஓயாத அலைகள் தாக்குதல்கள் நிகழ்ந்தன. இதில் ஓயாத அலைகள் மூன்றில் இத்தாவில் தரை இறக்கத்திற்காக அனைத்து படையணிகளின் பகுதிகளுடனும் லீமா கடல் மார்கமாக இத்தாவில் பகுதியில் தரையிறங்கி 34 நாட்கள் தொடர் தாக்குதலினை தொடுக்கின்றார்.

லீமாவும் எங்களுடன் நிக்கின்றார் என்ற உறுதியுடன் போராளிகள் களமுனையில் தாக்குதலினை தொடுக்கின்றார்கள். இவ்வாறுதான் தீச்சுவாலை முறியடிப்பு சமர் என்றாலும் அதிலும் முழுமையா லீமா அவர்கள் தனது படையணியுடன் களம் இறங்கி எதிரிக்கு தகுந்த பாடம் புகட்டினார் அன்று.

இதன்பின்புதான் சமாதனம் என்ற மாயை உருப் பெறுகின்றது. இதிலும் லீமா தன் உடலினை பொருட்படுத்தாமல் பயிற்சி திட்டங்களில் ஈடுபடுகின்றார். ஏன் அவரது உடல்நோயினை சீர்செய்ய பன்னாடு ஒன்றிற்கு லீமா அனுப்பப்படுகின்றார். இதன்போது ஓர் அதிசயம் நிகழ்கின்றது. மருத்துவத்தினை முடித்து சிறீலங்காவின் கட்டுநாயக்கா விமானநிலையம் வந்திறங்குகின்றார் லீமா. அப்போது சிறீலங்காப் படையின் தளபதிகள் எல்லோருக்கும் பால்ராஜ் அவர்களை ஒரு அதிசயம் போல் பார்க்கின்றனர். அப்போதுதான், அப்போது மட்டும்தான் எதிரியால் லீமாவை நேரடியாக பார்க்க முடிந்தது. அந்தளவிற்கு எதிரிக்கு கலக்கம் கொடுக்கும் வல்லவனாக திகழ்ந்தவர் லீமா அவர்கள்.



பால்ராஜ் அண்ணைக்கு இறுதி விடைகொடுக்கும் தேசியத் தலைவரும், தளபதிகளும்.

**மருத்துவத்தினை முடித்து சிறீலங்காவின் கட்டுநாயக்கா விமானநிலையம் வந்திறங்குகின்றார் லீமா. அப்போது சிறீலங்காப் படையின் தளபதிகள் எல்லோருக்கும் பால்ராஜ் அவர்களை ஒரு அதிசயம் போல் பார்க்கின்றனர். அப்போதுதான், அப்போது மட்டும்தான் எதிரியால் லீமாவை நேரடியாக பார்க்க முடிந்தது.**

சிகிச்சை பெற்று திரும்பியபின் சமாதான காலத்திலும் அவர் சும்மாய் இருக்கவில்லை. தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் கட்டளைக்கு அமைவாக கிழக்கு மாகாணம் செல்கின்றார். அங்கும் படை அணிகளை பயிற்சியில் ஈடுபடுத்துகின்றார். அடிப்படைப் பயிற்சி தொடக்கம் மோட்டார் படை அணி வரை லீமாவின் நெறிப்படுத்தலில் நடைபெறுகின்றது. இதன்போதுதான் 2004ம் ஆண்டு வாகரையில் ஆழிப்பேரலையிலும் லீமா அவர்களும் பாதிக்கப்படுகின்றார். எனினும் அதிலிருந்து மீண்டவர், பின்பு வன்னியில் படைக்கட்டுமானங்களின் மீள்பயிற்சி தொடக்கம் அதிகாரிகளின் பயிற்சி திட்டங்களில் முனைப்புடன் செயற்பட்டு பல மேல்நிலை அதிகாரிகளை உருவாக்குகின்றார். இங்கு படை அணிகளில் உள்ள லெப்.கேணல் நிலையுடைய கட்டளை அதிகாரிகளுக்கு படைத் தந்துரோபாயங்கள், யுத்திகள் என்பன லீமா அவர்களாலேயே நேராடியாக பயிற்றப்படுகின்றது. கனரக ஆயுதம் இயக்குதல், டாங்கி இயக்குதல், டாங்கிக்கு எதிர்தாக்குதல் செய்தல் போன்ற கனரக ஆயுதங்களை எல்லாம் அவர் திறம்பட கற்றுவைத்துள்ளார் என்பது அப்போதுதான் அந்த மேல்நிலை அதிகாரி பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு கூடத் தெரியவருகின்றது. லீமா அவர்களால் உருவாக்கப்பட்ட போர்வீரர்கள் எத்தனையோ பேர் களத்தில் சாதனைகளைப் படைத்திருக்கின்றார்கள்.

பயிற்சித்தளங்களில் பயிற்சிகள் வழங்கிக்கொண்டிருந்த நிலையில்தான் லீமா அவர்களுக்கு களமுனை ஒன்றை சீர்படுத்தவேண்டிய உத்தரவு வருகின்றது. அது மன்னார் களமுனை. குறுகியகாலத்திற்குள் மன்னார் களமுனையினை சீர்செய்துவிட்டார். அப்போதுதான் லீமா அவர்களின் உடல்நிலை சற்று மோசமடைகின்றது. இதனால் ஓய்வுக்காக விடப்படுகின்றார். ஆனால், அவர் ஓய்வெடுக்கவில்லை. போராளிகளுக்கு வகுப்பெடுக்கின்றார். அங்கும் லீமா அவர்களின் திறமையான நுட்பங்கள் பயிற்றப்படுகின்றது. போர் உச்சமாகிக்கொண்டிருந்த நிலையில், தமிழீழ தேசிய துணைப்படை கட்டுமானத்தினை லீமா அவர்கள் மேற்கொள்கின்றார். விடுதலைப் போராட்டத்திற்கு ஆட்பலம் சேர்க்கும் பணிகளில் அவர் தன் உடல்நிலையையும் பொருட்படுத்தாமல் நேரடியாக களமிறங்குகின்றார். கிராமங்களில் வீட்டுடன் நிற்கும் முன்னாள் போராளிகளை ஒன்றுகூட்டி அமைப்பில் இணையுமாறு கதைக்கின்றார். இதில் போராளிகள் பலர் இணைகின்றார்கள். இணைந்தவர்களின் குடும்பப் பராமாரிப்புச் செலவுகள் தொடர்ச்சியாக லீமா அவர்களினால் கவனிக்கப்படுகின்றது. வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கூட கட்டுவித்துக்கொடுக்கின்றார். இவ்வாறு இயலுமான உதவிகளை மேற்கொண்டு போராட்டத்துள் முன்னைய போராளிகளை புதிய வடிவத்தில் இணைக்கும் பணிகளில் மக்களிடம் சென்று நேரடியாக கதைக்கின்றார்.

இவ்வாறு இருக்கையில்தான் அன்று அலம்பில் பகுதியில் இவரது சேகமான செய்தி வந்து சேருகின்றது.

*(தொடரும்...)*